**இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் (''திட்டம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிலைமைகள் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- திட்டம் அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- திட்டத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தொழிற்பாடுகள் நட்டம் ரூபா 11.3 பில்லியனாகவும் நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10.6 பில்லியனாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 21.9 பில்லியன் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் இழப்பீட்டு கொடுப்பனவு அதிகரித்தமையே இவ் வீழ்ச்சிக்கான பிரதானமாக காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | 2010 இன் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம், அங்கத்துவ நிறுவன மொன்றின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் குறித்துரைத்த வரம்பினுள் இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டில் 70 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 18.2 பில்லியன் இழப்பீடு மாத்திரம் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்ட ஆறு அங்கத்துவ நிறுவனங்களின் வைப்பாளர்களிற்கு குறித்த ஆறு மாதத்தினுள் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட நேர்தை கடைபிடிக்க வேண்டும். |
| ஆ) | நாணயச் சபை அங்கீகரித்த இழப்பீட்டு நடைமுறையின் 1.3.1 (சீ) பிரிவின் பிரகாரம், வங்கி சாராத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை இயக்குநர் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கமைய ஒழுங்கமைப்பாளரால் சான்றுறுதிப் படுத்திய வைப்பாளர் பட்டியலொன்றை தொழிற்பாட்டுக் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். சான்றுறுதிப்படுத்திய வைப்பாளர்களின் பட்டியிலின் சரியான தன்மையினை குறித்த அங்கத்துவ நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களிற்குப் பிந்தாத வகையில் நேரடியாகவோ அல்லது கணக்காய்வாளர் ஒருவர் ஊடாகவோ தொடர்புடைய ஒழுங்கமைப்பாளர் மெய்மை ஆய்வு செய்தல் வேண்டும். இருப்பினும், அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்ட மேற்படி ஆறு அங்கத்துவ நிறுவனங்கள் தொடர்பில் ஒழுங்கமைப்பாளரால் வைப்பாளர்களின் பட்டியல் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சான்றுறுதிப் படுத்திய வைப்பாளர் பட்டியலை சமர்ப்பிக்க முடியாமை தொடர்பில் ஒழுங்கமைப்பாளர் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு இதற்காக மாற்றுவழி நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு நாணயச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | சொல்லப்பட்ட நடைமுறையுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 3.2 அங்கத்துவ நிறுவனங்களிற்கான கடன்கள் (MIs)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 இன் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் 8.1 (ii) ஆம் பிரிவின் பிரகாரம், எந்தவொரு அங்கத்துவ நிறுவனத்திற்கும் அந்த அங்கத்துவ நிறுவனம் மோசமான திரவத்தன்மை பிரச்சினை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரம் பிணையளிக்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்க முடியும். அதற்கமைய, 2014 திசெம்பர் 15 ஆந் திகதி ஒரு அங்கத்துவ நிறுவனத்திற்கு ரூபா 6 பில்லியன் கடன் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அக்கடனில் பெறவேண்டிய தொகை ரூபா 1.5 பில்லியனாகும். நிதிசார் வணிகத்தை மேற்கொள்வதற்காக குறித்த அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் 2020 மே 22 முதல் அமுலுக்குவரும் வகையில் நாணயச் சபையால் இரத்துச்செய்யப்பட்டது. மேலும், வழங்கப்பட்ட கடனிற்கு எதிராக அடகுவைக்கப்பட்டிருந்த ஆதனத்தின் சந்தைப் பெறுமதி ரூபா 1.187 பில்லியன் ஆகுமென 2018 திசெம்பர் 20 ஆந் திகதி விலைமதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப் பட்டதுடன் 2020 டிசம்பர் 31 இறுதியில் இச் சொத்து தெடர்பாக விலைமதிப்பீட்டு செய்யப்படவில்லை. மேலும், 2020 டிசம்பர் 31 வழங்கப்பட்ட கடனிற்கு எதிராக உறுதிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு கடன் புத்தகத்தின் எதிர்கால மதிப்பு ரூபா 51.8 மில்லியனாகும். அதன்படி மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலை அறிக்கையில் ரூபா 903 மில்லியன் நட்டக்கடன் ஏற்பாடு செய்யப்படடிருந்தது. | ஏற்றுக்கொள்ளப் பட்டது | நிலுவையாக வுள்ள கடன் மீதியினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்டத்தினால் குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரிடம் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி பின்னூட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு புதிய பிணையினையும் சமர்ப்பிக்காது மீளெடுத்திருந்தார். அதற்கமைய, 2015 திசெம்பர் 31 ஆந் திகதி திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்படி முதலீட்டின் மீது ரூபா 144.25 மில்லியன் நட்ட கழிவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 19 அன்று எடுக்கப்பட்ட குழு முடிவின்படி 2015 ஆம் ஆண்டு முதல் சுழலவிடுடப்பட்ட மேற்படி முதலீட்டினை மத்திய வங்கியின் நாணயச் சபையானது நிறுத்த முடிவு செய்தது. 2015 முதல் சுழன்று வந்திருந்த ரூபா 61.83 மில்லியன் பெறுமதியான முதலீட்டின் மீதான வட்டித் வருமானமானது 2020 செப்டெம்பர் வரை மூடப்படாது நீடிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | எதிர்காலத்தில் இவ்வாறான இடரினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் நட்டத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட கொடுப்பனவு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குமுறையின் பிரிவு 9.10 இன் படி, 2012 ஜனவரி 01 அல்லது அதற்குப் பிறகு நாணயச் சபையின் உத்தரவின்படி இடைநிறுத்தும்/ ரத்துச்செய்யும் சந்தர்பங்களில் இழப்பீடு வழுங்குதல் நடைமுறைக்கு வரும். ஆறு அங்கத்துவ நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் 2018,2019 மற்றும் 2020 ஆண்டுகளில் நாணய வாரியத்தால் ரத்து செய்யப்பட்டன/ இடைநிறுத்தப்பட்டன. கிடைத்த தகவலின்படி ரூபா.3.05 பில்லியன் பெறுமதியான இழப்பீடு மூன்று உறுப்பு நிறுவனங்களின் 7,424 வைப்பாளர்களுக்கு வழுங்கப்பட்டது. இதில் ரூபா.834 மில்லியன் இலங்கை மத்திய வங்கியினால் மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்டது. அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்ட்/ ரத்துச்செய்யப்பட்ட் உறுப்பு நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நாணயச் சபையானது ஒரு பொதுத்துறை வங்கியுடன் (முகவர் வங்கி) ஒப்பந்தத்தை மேற்கொண்டது. இதற்கமைய, மீளாய்வாண்டில் மேலே குறிப்பிட்ட ஆறு அங்கத்துவ நிறுவனங்களில் மூன்று அங்கத்துவ நிறுவனங்களின் 59,309 வைப்பாளர்களுக்கு முகவர் வங்கியின் ஊடாக ரூபா. 18 பில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டது. மேற்படி ஆறு அங்கத்துவ நிறுவனங்களின் 187,753 வைப்பாளர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 4.6 பில்லியன் இழப்பீடு செலுத்த வேண்டியிருந்நது. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது இத் திட்டத்தின் கீழ் அதிகப்பட்ச இழப்பீடு தொகையை ரூபா.600,000 லிருந்து ரூபா.1,100,000 வாக ரூபா.500,000 வால் அதிகரிக்க தீர்மாணித்திருந்தது. நிதிநிலை அறிக்கைகளின்படி, அதிகபட்ச இழப்பீடு தொகையின் அதிகரிப்பானது மேற்படி ஆறு அங்கத்துவ நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு ரூபா. 9.6 பில்லியன் மேலதிக கொடுப்பனவை ஏற்படுத்தும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது | இழப்பீடு செலுத்தும் செயல்முறையை விரைவுபடுத்துங்கள். |